| **அனுப்புநர்** | **பெறுநர்** |
| --- | --- |
| தண்.வசுந்தராதேவி,<br>எம்.ஏ., எம்.எட்., எம்.பில்.,<br>அரசுத் தேர்வுகள் இயக்குநர்,<br>சென்னை – 600 006. | அனைத்து முதன்மைக் கல்வி அலுவலர்கள்,<br>இணை இயக்குநர் புதுச்சேரி மற்றும்<br>அனைத்து மாவட்ட அரசுத் தேர்வுகள்<br>உதவி இயக்குநர்கள். |

**ந.க.எண்.060952/எப்.1/2019** **நாள் : 09.05.2019**

**ஐயா/அம்மையீர்,**

**பொருள் :** சென்னை–6, அரசுத் தேர்வுகள் இயக்ககம் – ஜூன் 2019 மேல்நிலை முதலாமாண்டு சிறப்புத் துணை தேர்வு – தேர்வர்கள் பள்ளிகள் / தேர்வு மையங்கள் மூலம் ஆன்–லைனில் விண்ணப்பித்தல் – அறிவுரை வழங்கக் கோருதல் – தொடர்பாக.

*****

நடைபெற்ற மார்ச் 2019 **மேல்நிலை முதலாம் ஆண்டு பொதுத் தேர்வில் தேர்ச்சி பெறாதவர்கள் / வருகை புரியாதவர்கள்** ஜூன் 2019 மேல்நிலை முதலாமாண்டு சிறப்புத் துணைத்தேர்வுக்கு விண்ணப்பிக்கலாம். **10.05.2019 பிற்பகல் முதல் 14.05.2019 வரை** பள்ளி மாணாக்கர் பயின்ற பள்ளிகள் வாயிலாகவும் / தனித்தேர்வர்கள் தேர்வெழுதிய தேர்வு மையங்கள் வாயிலாகவும் விண்ணப்பங்களை ஆன்–லைனில் பதிவு செய்யுமாறு தேர்வர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. தேர்வர்களின் விண்ணப்பங்களை கீழ்க்குறிப்பிட்டுள்ள அறிவுரைகளைப் பின்பற்றி ஆன்–லைன் வாயிலாகப் பதிவேற்றம் செய்ய தங்களது ஆளுகைக்குட்பட்ட பள்ளிகள் / தேர்வு மையங்களின் தலைமையாசிரியர்களுக்கு அறிவுறுத்துமாறு அனைத்து முதன்மைக் கல்வி அலுவலர்களும் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

1. **10.05.2019** பிற்பகல் முதல் தேர்வர்கள் பயின்ற பள்ளிகள் / தேர்வு மையங்களுக்கு வருகைபுரிவார்கள். அவ்வாறு வருகைபுரிவோரது மார்ச் 2019 மேல்நிலை முதலாமாண்டு பொதுத்தேர்வின் நுழைவுச் சீட்டு (Hall Ticket) மற்றும் மதிப்பெண் பட்டியலினை (Statement of Marks) ஆய்வு செய்து **www.dge.tn.gov.in** என்ற website-ல் பள்ளிகள் / தேர்வு மையங்களுக்கு ஏற்கனவே வழங்கப்பட்ட User ID மற்றும் Password-ஐ பயன்படுத்தி, தேர்வர்களின் விண்ணப்பங்களை ஆன்–லைனில் பதிவேற்றம் செய்ய வேண்டும்.

2...

2. பள்ளிகள் / தேர்வு மையங்கள் தேர்வர்களது விண்ணப்பங்கள் பெற்றிட **14.05.2019** அன்று கடைசி நாளாக தெரிவிக்கப்பட்டுள்ளது. அதுவரை பெறப்பட்டு பதிவு செய்த விண்ணப்பத்தொகையினை இணைப்பில் காணும் வழிமுறைகளைப் பின்பற்றி ஆன்–லைனில் செலுத்த வேண்டும். ஆன்–லைனில் விண்ணப்பத் தொகையினை செலுத்திய பிறகு அதற்கான இரசீதைப் பதிவிறக்கம் செய்துகொள்ள வேண்டும். அதனையும், Summary Report நகலையும் சம்பந்தப்பட்ட மாவட்ட அரசுத் தேர்வுகள் உதவி இயக்குநரிடம் **16.05.2019** அன்று ஒப்படைக்க வேண்டும்.

3. விண்ணப்பங்களை ஆன்–லைனில் பதிவேற்றம் செய்தல் மற்றும் விண்ணப்பத் தொகையினை ஆன்–லைனில் செலுத்துதல் தொடர்பாக ஏதேனும் ஐயங்கள் எழுமாயின் **8012594127** என்ற கைபேசி எண்ணை தொடர்பு கொள்ள வேண்டும்.

பள்ளிகள் ஏதேனும் இப்பணியினை மேற்கொள்ளவில்லை எனப் புகார் பெறப்பட்டால் சம்பந்தப்பட்ட பள்ளித் தலைமையாசிரியர் / ஆசிரியர்கள் மீது உரிய ஒழுங்கு நடவடிக்கை மேற்கொள்ள உரிய முதன்மைக் கல்வி அலுவலர்கள்/மாவட்டக் கல்வி அலுவலர்களுக்கு பரிந்துரைக்கப்படும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

எனவே, அனைத்து பள்ளித் தலைமையாசிரியர்களுக்கும் உரிய அறிவுரை வழங்கிடவும், மேற்படி பணியினை உரிய காலத்தில் முடித்திட உதவிடவும் அனைத்து முதன்மைக்கல்வி அலுவலர்களும் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

அரசுத் தேர்வுகள் உதவி இயக்குநர்கள், தங்கள் மாவட்டத்திலுள்ள பள்ளிகளிலிருந்து மேற்குறிப்பிட்டவாறு பெறப்படும் தேர்வுக் கட்டணம் செலுத்தியதற்கான ரசீதுகள் (Receipts) மற்றும் Summary Report போன்ற விவரங்களை 20.05.2019 –க்குள் “**திரு. கா. திருநாவுக்கரசு, அரசுத் தேர்வுகள் துணை இயக்குநர் (பொது), அரசுத் தேர்வுகள் இயக்ககம், சென்னை–6**” என்ற முகவரிக்கு பதிவஞ்சல் மூலம் அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

**இணைப்பு**
ஆன்–லைனில் விண்ணப்பத் தொகை
செலுத்துவதற்கான வழிமுறைகள்

ஒம்/–

**இயக்குநர்**

**நகல்**

1. அனைத்து பள்ளிகள் / தேர்வு மைய தலைமையாசிரியர்கள்
   – முதன்மைக் கல்வி அலுவலர்கள் வாயிலாக (துக்க நடவடிக்கைக்காக)
2. அனைத்து மாவட்டக் கல்வி அலுவலர்கள் (தகவலுக்காக)

**ஆன்–லைனில் ஜுன் 2019, மேல்நிலை முதலாமாண்டு சிறப்புத் துணைத் தேர்வு விண்ணப்பத்தொகை செலுத்துவதற்கான வழிமுறைகள்**

www.dge.tn.gov.in

↓

Services

↓

Online Payment

↓

Accept - Declaration

↓

Press - Proceed Button

↓

Payment Category - Select Higher Secondary First Year Fee Payment By Schools

↓

Enter School Code & Select Exam Fees

↓

Click- Submit Button

↓

Fill all the particulars and then press submit button

↓

Pay the amount by selecting Internet Banking Option